<u>செய்தி வெளியீடு</u>

தமிழக அரசின் பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறை மன்ற நடுவராக (Tamil Nadu Local Bodies Ombudsman) முனைவர். சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களுக்கு இன்று (30.04.2018) ராஜ்பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் பதவி பிரமாணம் செய்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி, துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஆர். ராஜகோபால், இ.ஆ.ப., தமிழக அரசின் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை–22
நாள் : 30.04.2018

ஒம்/–
இணை இயக்குநர் (ம.தொ)